---

**மதுராவல பிரதேச சபை**

**களுத்துறை மாவட்டம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

---

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

---

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 13 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 மார்ச் 28 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 யூலை 31 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**1.2 அபிப்பிராயம்**

---

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, மதுராவல பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மதுராவல பிரதேச சபையின நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

வேலைக் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் பட்டியல் இன்மையால் ரூபா 3,282,162 தொகையான வேலைக் கடன்கொடுத்தோர் மீதியும், ரூபா 4,936,714 தொகையான வேலைக் கடன்பட்டோர் மீதியும், வங்கி மீதி உறுதிப்படுத்தும் கடிதங்கள் இன்மையால் ரூபா 2,056,969 தொகையான காசு மீதியும் உரிய பட்டியல்கள் இன்மையால் ரூபா 97,533 தொகையான செலுத்தப்பட வேண்டிய பெறுமதி சேர் வரி மீதியும் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,278,368 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,945,212 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

பின்வரும் நிதிக் கட்டுப்பாட்டு பற்றாக்குறை.்.குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் பொது நிதிக் கணக்குகளில் ரூபா 2,052,967 தொகையான காசு மீதி நிலவிய போதிலும் இது குறுங்கால அல்லது முதலீடுகள் தொடர்பில் கருத்திற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் பாதீட்டு மதிப்பீட்டின் படி 39 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 302,800 தொகையில்

இருந்தும் 11 மூலதனச் செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 9,260,500 இலிருந்து எவ்வித செலவினமும் ஏற்கப்பட்டிராமையால் ஏற்பாட்டின் 100 % மும் சேமிக்கப்பட்டிருந்தது.

(இ) 21 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 1,012,000 இல் ரூபா 547,000 தொகை வேறு செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்ததுடன் எஞ்சிய ரூபா 465,000 தொகையான ஏற்பாடும் செலவிடப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ |
| (i) | வீதவரியும் வரியும் | 1,444 | 1,688 | 586 |
| (ii) | வாடகை | 70 | 23 | 288 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 311 | 303 | 8 |
| (iv) | ஏனைய வருமானம் | 2,887 | 2,837 | -- |

**2.3.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 2,530,208 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 10,307,070 |

**2.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 132(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் சமய, புண்ணிய, கலாச்சார, சுகாதார, விநோத மற்றும் கல்வி நடவடிக்கைகள் தொடர்பான செலவினம் ஒரு வருடத்திற்காக ரூபா 1,000 தொகையை விஞ்சுமாயின் அமைச்சரின் முன்னங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் அதிகாரப்பகுதியில் அறநெறிப் பாடசாலை நூலகத்திற்காக புத்தகங்கள் வழங்கப்படல் மற்றும் அதிகாரப்பகுதியில் உள்ள ஆரம்பப் பாடசாலைக்கான கருவிகள் வழங்கப்பட்டமைக்காக ரூபா 117,714 தொகை சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

**2.5 ஒப்பந்த நிர்வாகம்**

மகநெகும கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஏற்பாடு அங்கீகரிக்கப்பட்டிருந்த கட்டுஹேன லாவலுகஹஹேன வீதியைக் கொங்கிரீட் கற்கள் பதித்து அபிவிருத்தி செய்வது சபையின் நேரடியான உழைப்பை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 ஏப்ரல் 09 ஆம் திகதி சபையின் தொழிநுட்ப உத்தியோகத்தருடன் மேற்கொள்ளப்பட்ட பௌதீக ஆய்வின் போது 75 மீற்றர்களிற்கு பதிக்கப்பட்டிருந்த கொங்கிரீட் கற்கள் சில சில இடங்களில் தாழ்ந்திருந்தமையும் (ஒரு மட்டத்தில் இருக்கவில்லை) கற்கள் உடைந்திருந்தமையும் கற்களின் வெளிப்பகுதி கழுவப்பட்டு உட்பகுதிக் கற்கள் வெளிப்பட்டுள்ளமையும் அவதானிக்கப்பட்டது.

(ii) மதிப்பீட்டின் வேலை விடய இல. 7 இன் பிரகாரம் வீதியின் இரு மருங்கிலும் தடைகள் 110 மீட்டர் ஒவ்வொரு நாளுக்கு 0.15 மீற்றர் அகலத்திற்கு 1:2:4(3/4") கலவையில் கொங்கிரீட் இடப்படுவதற்காக 60 சீமேந்துப் பைகள் தேவைப்பட்ட போதிலும் 2012 யூலை 19 ஆம் திகதிய வேலைப் பூர்த்தி அறிக்கையின் படி 43 சீமேந்துப் பைகள் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தன.

**2.6 செயற்பாட்டுத் திறமையீனங்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிப்பட்டுள்ளன.

**2.6.1 தீர்க்கப்படாத கொடுக்கவ்வாங்கல்கள்**

2006 ஆம் ஆண்டின் போது மதுராவல பிரதேச சபை கூட்டமைக்கப்படுகையில் புலத்சிங்ஹல பிரதேச சபையிலிருந்து வழங்கப்பட்டிருந்த ரூபா 4,910,140 கூட்டுத்தொகையான 16 சொத்துக்கள் மீதிகளையும் ரூபா 6,858,118 தொகையான 14 பொறுப்பு மீதிகளையும் அடிப்படையாக் கொண்டு கணக்குகள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அம் மீதிகளைத் தீர்ப்பதற்கோ /அறவிடப்படுவதற்கோ கணக்காய்வுத் தினமாகிய 2013 ஏப்ரல் 10 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.6.2 காணி ஏலவிற்பனைக்கிடல்**

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 154(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபை அதிகார எல்லைக்குள் காணிகள் ஏலவிற்பனையிடப்படுகையில் ஏலவிற்பனையிடப்பட்ட காணிகளின் விற்பனை விலையில் 1% வருமானம் சபை அறவிட வேண்டிய போதிலும் 2010, 2011 ஆம் 2012 ஆம் ஆண்டுகளின் போது ஏலவிற்பனை செய்யப்பட்ட 5 காணிகளின் சபை வருமானம் நிர்வாகத்தினரால் தயாரிக்கப்பட்டிருந்த மொத்த மதிப்பீட்டின் 1% ஆன ரூபா 1,339,659 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன் மொத்த மதிப்பீட்டிற்கும் சந்தை விற்பனைப் பெறுமதிக்கும் இடையேயான வேறுபாடு சீராக்கப்பட்டு எஞ்சிய தொகை பெற்றுக்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) காணி துணைப்பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகையில் பொது வசதிகளுக்காக சபைக்கு ஒதுக்கப்பட்டிருந்த காணிகளின் எல்லைகள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.6.3 சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் செயற்பாடு தொடர்ந்து செய்யப்படாமை**

2008 சனவரி 25 ஆம் திகதிய 1533/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வெளியிடப்பட்ட மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மூலம் உள்ளூராட்சி நிறுவகங்களுக்கு அதிகாரங்களைக் கையளித்து அதிகாரங்களை செயற்படுத்துவது தொடர்பான அறிவுறுத்தல் கைநூல்/ சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் செயல் நடவடிக்கையின் பிரகாரம் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டும்.

(அ) 13 துறைகளின் கீழ் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிராத 63 நிறுவகங்கள் சபையால் இனங்காணப்பட்டிருந்த போதிலும் இதற்கான அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கு கணக்காய்வுத் தினமாகிய 2013

ஏப்ரல் 09 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் 25 துறைகளில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுடன் தொடர்பான சுற்றாடல் மாசுபடலைத் தடுத்தல், குறைத்தல் மற்றும் கட்டுப்படுத்தலுக்காக நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட வேண்டிய போதிலும் அத்தகைய எவ்வித நிகழ்ச்சித்திட்டமும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.6.4 மயானம்**

சபை அதிகாரப்பகுதியில் இனங்காணப்பட்ட 24 மயானங்கள் உள்ளமை கண்டறியப்பட்டதுடன் இது தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

(அ) 13 மயானங்கள் தொடர்பில் அளவீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 6 மயானங்கள் ஒப்படைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக மாகாண காணி ஆணையாளருக்கு கோரல்கள் விடுக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் தினம் வரையிலும் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 636 குடாயால, மாகொட, துத்திரிபிட்டிய 2 ஏக்கர் அளவிலான பொது மயானத்தில் அத்துமீறி பயிர்ச்செய்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் 633, வேரவத்த, தெல்கஹகந்த மயானத்தின் 1 ஏக்கர் அளவில் காணிகள் அத்துமீறிய கைப்பற்றல்கள் மேற்கொள்ளப்பட்டமைக்கு முறைப்பாடுகள் பெறப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.6.5 வருடாந்த பொருள் மெய்மையாய்வு**

1988 பிரதேச சபை (நிதி, நிர்வாகம்) விதிகளின் 203 ஆம் பந்தியின் பிரகாரம் சபையின் ஆதனம் தொடர்பாக முழுமையான மெய்மையாய்வும் 217 இன்

பிரகாரம் சகல காணி மற்றும் கட்டிடங்கள் மெய்மையாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.6.6 ஹியூம் குழாய்கள் உற்பத்தியும் விற்பனையும்**

2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டின் பாதீட்டின் மூலம் சபைக் கைத்தொழிலுக்காக தேவையான ஹியும் குழாய் உற்பத்தி செய்தமையும் 2012 ஆம் ஆண்டின் போது ஹியும் குழாய் விற்பனையின் மூலம் வருமான உழைப்பிற்கும் தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டின் போது இவ்வாறு சபை கைத்தொழிலுக்காகவும் விற்பனைக்காகவும் உற்பத்தி செய்யப்பட்டிருந்த ஹியும் குழாய் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) உள் விட்டம் 2 அடிகளும், 1.5 அடிகளும், 1 அடியும் தடிப்பு 2 அங்குலமுமான முறையே 25, 120 மற்றும் 80 ஹியும் குழாய்கள் என 225 கூட்டுத்தொகையான குழாய்கள் உற்பத்தி செய்வதற்கு 2012 சனவரி 17 ஆம் திகதி ரூபா 477,660 தொகை மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் மூலப்பொருட்கள் விலை கூடியவை எனக் குறிப்பிட்டு இறுதியில் மேற்குறித்த மூலப்பொருட்களின் விலையின் கீழ் 2012 திசெம்பர் 24 ஆம் திகதி வரையிலும் 2 அடி ஹியும் குழாய் ஒன்றும், 1.6 அடியிலான 24 ஹியும் குழாய்களும், 1 அடியிலான 11 ஹியும் குழாய்களுமாக கூட்டுத்தொகை 36 அளவிலான குழாய்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. இதன் படி ஹியூம் குழாய் உற்பத்தியால் எதிர்பார்த்த இலக்கை எய்துவதற்கு முறையே 4 சதவீதமும், 20 சதவீதமும், 14 சதவீதமும் வரையான குறைந்த அளவு காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் சபையில் எவ்வித வேலைக்காகவும் இந்த ஹியும் குழாய்கள் பயன்படுத்தப்பட்டிராததுடன் கணக்காய்வுத் தினமாகிய 2013 ஏப்ரல் 05 ஆம் திகதி வரையிலும் 1.6 அடியிலான 14 ஹியும் குழாய்களே பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தன. இதன் பிரகாரம், ஹியும் குழாய்களின் விற்பனை மேற்கொள்ளப்பட்டிராததுடன் வேலைகளுக்கான

பயன்பாடு மிகவும் குறைந்த நிலையில் நிலவியமை அவதானிக்கப்பட்டது.

**2.6.7 கலை நிலையத்திற்காக சங்கீத உபகரணங்களை பகிர்ந்தளித்தல்**

2012 ஆம் ஆண்டின் போதான பாதீட்டுத் தீர்மானமாக செயற்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டிருந்த அதிகாரப்பகுதியில் கலை நிலையத்திற்காக சங்கீத உபகரணங்களை பகிர்ந்தளிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 193,210 செலவிடப்பட்டு பல்வேறு இசை வாத்தியங்கள் மற்றும் ஆடைத் தொகுதி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 132(ஏ) பிரிவின் பிரகாரம் சமய, புண்ணிய, கலாச்சார, சுகாதார, விநோத அல்லது கல்வி செயற்பாடு தொடர்பாக ஒரு வருடத்திற்கு மொத்தம் ரூபா 1,000 கூட்டுத்தொகைக்கு மேற்படின் அமைச்சரின் கடிதத்தின் மூலம் முன்னங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் மேற்குறித்த பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு பகிர்ந்தளிப்பதற்காக அவ்வாறு அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2 கலை நிலையங்களுக்கு 05 வகையான இசை வாத்தியங்கள் மற்றும் ஆடைத் தொகுதி ஒன்றும் ஒப்படைக்கப்பட்டுள்ளமை பதிவேட்டில் பதியப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு பொறுப்பேற்கப்பட்டமைக்கு எழுத்து மூலச் சான்றுகள் இல்லாதிருந்ததுடன் அவ் விடயங்கள் 2013 ஏப்ரல் 05 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வின் போது சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.6.8 கொங்கிரீட் தூண்கள் உற்பத்தி செய்தல்**

விற்பனை செய்யப்படுவதற்கும் சபைக்குரித்தான மயானக் காணிகளினதும் பொதுக் காணிகளினதும் எல்லை வேலிகளுக்காக தேவையான கொங்கிரீட் தூண்கள் தயாரிப்பதற்கு 2011 ஆம் 2012 ஆம் ஆண்டுகளின் போது பாதீட்டு திட்டமாக அங்கீகரிக்கப்பட்ட இச் செயற்திட்டத்திற்காக ரூபா 499,294

தொகையான மதிப்பீடு ஒன்று அங்கீகரிக்கப்பட்டிருந்தது. 2012 திசெம்பர் 24 ஆம் திகதி வரையிலும் ரூபா 33,493 தொகையான பணம் செலவிட்டு 100 கம்பி தூண்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. எனினும் கணக்காய்வுத் தினமாகிய 2013 ஏப்ரல் 05 ஆம் திகதி வரையிலும் இக் கம்பி தூண்கள் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாது சபை வளாகத்தில் காணப்பட்டன.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதுடன் பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்துக்கள் கட்டுப்பாடு
(ஈ) பாதீடு